**கொபெய்கனே பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்வரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுலை 14 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 17 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொபெய்கனே பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுடன் தொடர்பான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படல் வேண்டும் | ஏதிர்வரும் வருடம் முதல் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பிரதேச சபை புதிய கட்டட நிர்மாணத்திற்காக 2018 மற்றும் 2019 வருடங்களில் செலவிடப்பட்ட ரூபா. 19,568,370 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | கணக்குகளுக்கு தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டுக்கான நிதிக்கூற்று தயாரிக்கும் பொழுது அத் தொகையை நாட்குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மோட்டர் கிரேடர் இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா. 409,500 மோட்டார் வாகன மற்றும் இழுவண்டி கணக்கில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளுக்கு தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டுக்கான நிதிக்கூற்று தயாரிக்கும் பொழுது அத் தொகையை நாட்குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று ஊழியர் கடன் மீதிகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் காணப்பட்ட மீதிக்கும் அட்டவணையின் அடிப்படையிலான மீதிக்கும் இடையில் ரூபா. 298,424 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டு தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமை காரணமாக ரூபா. 39,177,942 கூட்டுத்தொகையான இயந்திர உபகரணங்கள், தளபாடம் மற்றும் பொருத்துகைகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் கோவைப்படுத்தப்படும் பொழுது இயந்திர உபகரண அட்டவணை மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் அட்டவணை தவறியுள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஊ) | ரூபா. 110,526,325 கூட்டுத் தொகையான கட்டிடங்களுக்கான பெறுமதியுடன் கூடிய முறையான அட்டவணைகள் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் கட்டிடங்களுக்கான பெறுமதிகளை சரியாக நாளதுவரையாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 8,059,313 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,813,092 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 1,475,885 | 1,684,972 | 1,539,434 | 505,077 | 1,320,385 | 1,621,278 | 1,546,870 | 359,540 |
| ii. | வாடகை | 3,577,045 | 3,696,373 | 3,667,016 | 60,038 | 3,535,295 | 3,870,278 | 3,841,602 | 30,682 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,389,100 | 1,239,320 | 1,239,320 | - | 1,029,100 | 1,191,874 | 1,191,874 | - |
| iv. | ஏனைய வருமானம் | 13,511,288 | 42,842,700 | 43,214,355 | 13,733,467 | 46,534,100 | 45,544,898 | 76,313,174 | 14,105,121 |
| | மொத்தம் | 19,953,318 | 49,463,365 | 49,660,125 | 14,298,582 | 52,418,880 | 52,228,328 | 82,893,520 | 14,495,343 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய வீதவரி மற்றும் வரி நிலுவை ரூபா. 484,551 ஆகவிருந்தது. | பிரதேச சபையின் விதிகளுக்கு இணங்க நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந் நிலுவைத் தொகையில் ரூபா. 73,129 அறவிடப் பட்டுள்ளதுடன், மீதித் தொகையையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 20,526 ஆகவிருந்த ஏக்கர் வரி தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | பிரதேச சபையின் விதிகளுக்கு இணங்க நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை என்பதைத் தெரிவிக்கின்றேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொபெய்கனே பஸ் தரிப்பிட கடைத் தொகுதியிலுள்ள ஒரு கடையை வேறொருவருக்கு கைமாற்றம் செய்து 4 வருடங்கள் கடந்திருந்த போதும் புதிய வாடகைதாரருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான | உப வாடகைக்கு விடல் சம்பந்தமாக உள்ளுராட்சி ஆணையாளரின் (வடமேல்) சுற்றறிக்கையின் பிரகாரம் | தற்பொழுது சமிலா ஜயமாலி எனும் பெயரில் A-1 கடைக்கான வாடகை செலுத்தப்படுவதுடன் புதிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திட நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்படல் வேண்டும். | எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 04 சொத்துக்கள் 2019ஆம் ஆண்டு வாடகைக்காக விடப்படாததன் காரணமாக ரூபா. 25,650 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | நீண்ட காலமாக வாடகைக்கு விடப்பட முடியாதுள்ள சொத்துக்களை வேறு பலன் தரக்கூடிய விடயங்களுக்காகப் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறுவதற்கு யாரும் முன்வராததன் காரணமாக வாடகைக்கு விடப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

**(அ) <u>நீதிமன்றத் தண்டப்பணம்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 2,000,000 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 6,520,000 ஆகவும் இருந்தது. | அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட்டு மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிறப்பிக்கப்பட்ட உப விதிகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட இரண்டு பொது உப விதிகள் சபையினால் பின்பற்றப்பட்டிருந்தன. | சபையினால் பின்பற்றப்பட்ட/ விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் புதிய தேவைக்கு ஏற்ப உப விதிகள் பிறப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய உப விதிகளை பிறப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகின்றன. |

**(ஆ) சுற்றாடல் சார்ந்த சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வியாபார அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 29 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். | அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு அவற்றை புதுப்பித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்துக்கான ரூபா. 331,659 உம் 03 வருடங்களைத் தாண்டிய ரூபா. 158,252 உமான பெற வேண்டிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்துக்கான ரூபா. 973,532 உம் 03 வருடங்களைத் தாண்டிய ரூபா. 2,715,615 உமான செலுத்த வேண்டிய நிலுவைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செலுத்த வேண்டிய நிலுவைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**பணியாளர் வெற்றிடம் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டாம் நில மற்றும் ஆரம்ப நிலை பணியாளர்களுடன் தொடர்பான 7 வெற்றிடங்களும் 5 மிகைப் ஊழியர்களும் காணப்பட்டனர். | வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கும் மேலதிக பணியாளர்களை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 02 வெற்றிடங்கள் தொடர்பில் உள்ளூராட்சி திணைக்களத்திற்கும் பிரதான செயலகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் தொழிலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அலுவலகம், பொது நூலகம், விளையாட்டு மைதானம் மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் ஆகியன அமைந்துள்ள 06 ஏக்கர் அளவிலான காணி மற்றும் கெப் வண்டி என்பன சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபை அலுவலகம், பொது நூலகம், விளையாட்டு மைதானம் மற்றும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் ஆகியன அமைந்துள்ள 06 ஏக்கர் காணியை கையேற்றல் தொடர்பான சகல நடவடிக்கைகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

### 3.4.2 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 டிசம்பர் 31 ஆம் திகதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 91,057 ஆகவிருந்த 02 நடைமுறை வங்கிக் கணக்குகள் 02 வருடங்களுக்கு மேலாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. | செயலற்ற கணக்குகளை மூடி விடுவதற்கு அல்லது செயற்படுத்திக்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந் நடைமுறைக் கணக்குகள் இரண்டையும் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். |

### 3.5 இனங்காணப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான பெகோ லோடர் 2019 ஆகஸ்ட் 05ஆம் திகதி விபத்துக்குள்ளானதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா. 98,386 ஆகவிருந்ததுடன் அதில் ரூபா. 34,900 காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இதற்குரிய பொறுப்பானவர்களை உறுதிப்படுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 104இன் கீழ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்பட்டு பொறுப்பானவர்களை உறுதிப்படுத்த வேண்டும். | இச் சம்பவம் தொடர்பாக சாரதி குறிப்பிடுகையில் உதவியாளர் ஒருவர் இல்லாதிருந்ததன் காரணமாகவே இந்த விபத்து நடந்ததாகக் கூறினார். குறித்த காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு மதிப்பீடொன்றும் பெறப்பட்டதுடன் அது காப்புறுதி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது காப்புறுதி உரிமைச் சான்றிதழில் உள்ள சட்ட ரீதியான நிலைமைகளின் படி 10 வீதமான கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாதென கூறியதால் அதை சபை நிதியத்திலிருந்து வழங்குவதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் செயற்படுவதாக குறிப்பிடுகிறேன். |

**3.6 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாதீடு செய்யப்பட்ட வினியோகம் மற்றும் சேவைகள் உள்ளடங்கும் வகையில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பாதீடு செய்யப்பட்ட வினியோகம் மற்றும் சேவைகள் உள்ளடங்கும் வகையில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஏப்ரல் 30 ஆம் திகதியின் பின்னர் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கிறேன். |